காலை முரசு
பக்கங்கள் 19

## கொள்கை தவறிய 'சங்கு' தமிழரசுக் கட்சி கண்டனம்



"ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மன்னார் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சியமைத் 02

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 11 | புதன்கிழமை | 25.06.2025 | அதிர்வு 325

### இலங்கை அரசு புரிந்த தமிழினப் படுகொலை தொடர்பில்

# பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் சர்வதேச விசாரணைக்கு வழிசெய்க!



## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் சிறீதரன் எம்.பி. நேற்று நேரில் கோரிக்கை

ஈழத்தமிழர்கள் மீது இலங்கை அரசால் திட்டமிட்ட வகையில் புரியப்பட்ட இனப்படுகொலைக்கும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் உள்ளகப் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துவது இனமேலாதிக்கம் மிகுந்திருக்கும் இலங்கைத் தீவில் சாத்தியமற்றது என்பதால், பொறுப்புக்கூறலை உறுதி செய்யும் வகையிலான சர்வதேச விசாரணைக்கு வழிசெய்யுமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 03



# தரைவழியாக இன்று யாழ். வருகின்றார் ஐ.நா. ஆணையாளர்

### பல்வேறு தரப்பினரையும் அவர் சந்திப்பார்

(ந.லோகதயாளன்)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

இதன்போது, அவர் செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிடுவதுடன், அங்கு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களையும் சந்திப்பார் என்று அறியவருகின்றது. 02

### மனிதப் புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரி

# யாழில் இன்று பெரும் போராட்டம்




யாழ். செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி கோரிய 'அணையா விளக்கு' போராட்டத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன.

இன்று முற்பகல் 10.10 மணிக்குப் போராட்டம் நடைபெறும் செம்மணி வளைவு அருகே அக வணக்கம், மலர் அஞ்சலி செலுத்தப்படும்.

தொடர்ந்து, நண்பகல் 12 மணிக்கு மனிதப் புதைகுழி கண்டறியப்பட்ட சித்துப்பாத்தி மயானத்தில் இருந்து போராட்டம் ஆரம்பமாகும். அங்கிருந்து, செம்மணி வீதி வழியாக மனித சங்கிலி முறைமையில் ஐ. நா. வதிவிடப் 02




உள்ளூராட்சி சபை தவிசாளர், பிரதி தவிசாளர் தேர்வுகள் தொடர்பில் திருகோணமலை நிலைமை பற்றி நேற்றுக் குறிப்பிட்டு இருந்தேன்.

நேற்று திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபைக்கான தலைவர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை நியமித்த சுரேஷ்குமாருக்கு பதிலாக தமது தெரிவு ஒருவரை தலைவராக தேர்வு செய்ய வைப்பதற்கு நேற்று நண்பகல் - கடைசி நேரம் வரை - பகீரதப் பிரயத்தன முயற்சிகளை எடுத்தார் தமிழரசுக் கட்சியின் மாவட்டத் தலைவர் குகதாசன் எம்.பி.

ஆயினும், வெற்றிக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்க முன்வந்த சங்குக் கூட்ட 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணியின் திருகோணமலைத் தரப்பினர், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை தங்களின் சங்கு கூட்டணித் தலைமையூடாக தங்களுக்குத் தெரிவித்த சுரேஷ்குமாருக்கு மட்டுமே நாங்கள் வாக்களிப்போம், வேறு எவருக்கும் வாக்களிக்க மாட்டோம் என்று கடைசி நேரம் வரை உறுதியாக நின்றமையால், வேறு வழியின்றி அந்தத் தெரிவுக்கு இடம் அளித்து வாளா இருக்க வேண்டிய நிலைமை குகதாசனுக்கு ஏற்பட்டது.

நேற்று எல்லாத் தெரிவுகளும் முடிந்த பின்னர், சங்குத் தரப்பின் திருகோணமலை மாவட்ட பிரமுகர் ஒருவரோடு குகதாசன் தொடர்பு கொண்டார் எனத் தெரிகிறது. திருகோணமலை மாநகர சபையில் உங்களுக்கு தருவதாக கூறப்பட்ட பிரதி மேயர் பதவியை இரண்டு வருடங்களில் முடிவில் தரலாம், அது பற்றி பேசுவதற்கு வாருங்கள் என்று குகதாசன் அழைத்தாராம்.

"இல்லை, ஐயா. உங்கள் அழைப்புக்கு நன்றி. எங்கள் சங்குக் கூட்டணியின் தலைமை தமிழரசுத் தலைமையோடு அது பற்றி பேசி முடிவு செய்து கொள்ளும். உங்களுடன் நாம் அது குறித்துப் பேச மாட்டோம்." - என்று தொலை பேசியை துண்டித்தாராம் சங்குக் கூட்டணியின் பிரமுகர் என அறிய வந்தது.

திருகோணமலை மாவட்டம் குச்சவெளிப் பிரதேச சபை விடயத்தில் விவகாரத்தை கையாளும் பொறுப்பை குகதாசனிடமே தமிழரசு கட்சி தலைமை கை விட்டமையினால், அந்த இடத்திலும் வழமை போல குழப்பத்தை ஏற்படுத்தி வாய்ப்பைப் பறி கொடுத்தார் குகதாசன்.

இதே போல மன்னாரிலும் பல இடங்களிலும் நேற்று தமிழரசு கட்சி வாங்கிக் கட்டிக் கொண்டுள்ளது. சங்கு கூட்டணி அங்கு திசை காட்டியுடன் இணைந்து தமிழரசைத் தோற்கடித்ததாகத்தான் கதை வெளியே வந்துள்ளது.

ஆனால் ஊடுருவி விசாரித்தால், சங்குக் கூட்டணியோடு சேர்ந்து தமிழரசு அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான வழிகாட்டுதலை தமிழரசுக் கட்சியின் தலைமை தெளிவாக வழங்கியிருந்தது என்பது உறுதியாகத் தெரிய வந்தது. ஆனால் மன்னாரில் விடயங்களைக் கையாண்ட தமிழரசுக் கட்சியின் மாவட்டத் தலைவர் சார்ள்ஸ் நிர்மலநாதன், கட்சித் தலைமையின் சொல்லுக்கு மாறாக - முரணாக - சங்குத் தரப்பை வீழ்த்தும் நோக்கோடு, சங்குக்கு எதிரான நிலைப்பாட்டை, திசை காட்டியின் ஆதரவோடு எடுக்க முற்பட்டார் என்றும், அதற்கு தமிழரசுக் கட்சியின் அடுத்த மட்ட உறுப்பினர்களும், தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபை உறுப்பினர்களும் மறுத்தமையினால் அங்கு குழப்பம் ஏற்பட்டது என்றும் தெரிகிறது.

இதனால் தமிழரசின் ஆதரவை உதாசீனப்படுத்தி விட்டு, சங்கு தனியாக இறங்க, சாள்ஸின் வழிகாட்டலில் தங்களோடு சேர்ந்த இயங்க மறுத்த தமிழரசு கட்சியினருக்கு ஒரு பாடம் படிப்புக்கும் எண்ணத்தோடு, தேசிய மக்கள் சக்தி (திசைகாட்டி), சங்கு நிறுத்திய வேட்பாளர்களை தன் பாட்டில் ஆதரிக்க, மன்னார் மாவட்டத்தில் பல இடங்களிலும் சங்கின் வெற்றி நேற்று வலுவானதாக மாறியது. தமிழரசு தோற்றுப் போனது.

கட்சித் தலைமையின் முடிவுக்கு மாறாக, முதல் நாள் - அதாவது நேற்று முன்தினம் - தமிழரசின் மன்னார் மாவட்ட தலைவர் சார்ள்ஸ் நிர்மலநாதன், தேசிய மக்கள் சக்தியின் ஆதரவையும் பெற்று சங்கு தரப்பை வீழ்த்த வகுத்த வியூகம்தான் மன்னாரில் பலத்த அடியை தமிழரசுக் கட்சிக்கு வாங்கி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

இவ்வாறு கட்சித் தலைமையின் வழிகாட்டலை மீறி, மாவட்டங்களில் தம்பாட்டில் குட்டி ராஜாக்களாக - சின்ன ஜமீன்களாக - நடந்து கொண்ட மாவட்டத் தலைமைகள் குறித்து தமிழரசுக் கட்சி அடுத்த வாரத்தில் இருந்து நல்ல 'கவனிப்பை' ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

## கொள்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கின்றது. இது உள்ளூராட்சி சபைகள் தொடர்பான தமிழ்க் கட்சிகளின் தொடக்க காலக் கோட்பாட்டை முழுமையாக மீறும் செயல். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இந்த அணுகு முறையைத் இலங்கைத் தமிழரசுக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள் தெரிவில் எங்களுக்குள் வேறுபாடுகள் இருந்த போதிலும் தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கில் உள்ள எந்தவொரு சபையிலும் ஆட்சி அமைப்பதற்கு இடமளிக்கக்கூடாது என்பதில் எல்லாத் தமிழ்க் கட்சிகளும் தொடக்கம் முதலே ஓர் இறுக்கமான கொள்கைக் கோட்பாடாகக் கடைப்பிடித்து வந்திருக்கின்றன.

இந்தக் கோட்பாட்டை இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கு முழுவதும் எந்தப் பிசிறுமின்றிப் பின்பற்றி வந்திருக்கின்றது. இதுநாள் வரையில் ஏனைய தமிழ்க் கட்சிகளும்கூட அதனைப் பின்பற்றி வந்திருந்தன.

ஆனால், இந்த அடிப்படைக் கோட்பாட்டுக்கு முரணாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மன்னார் மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சியமைத்திருக்கின்றது. இது உள்ளூராட்சி சபைகள் தொடர்பான தமிழ்க் கட்சிகளின் தொடக்க காலக் கோட்பாட்டை முழுமையாக மீறும் செயல்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இந்த அணுகுமுறையைத் இலங்கைத் தமிழரசுக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றது. அவர்களின் இந்தச் செயல் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகளுக்கு மக்கள் வழங்கிய ஆணைக்கு முற்றிலும் முரணானது.

'கொள்கைக்கூட்டு' என்று முழங்கியவர்கள் இப்போது அடிப்படைக் கோட்பாட்டையே தகர்த்து தேசிய மக்கள் சக்தியுடன் கைகோர்த்திருப்பது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் செயல்." – என்றுள்ளது.

## தரைவழியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் 4 நாள்கள் பயணமாக இலங்கைக்கு வருகை தந்துள்ளார். நேற்றைய தினம் கொழும்பில் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடிய அவர் இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் வருகின்றார்.

தரைவழியாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் அவர், யாழ். செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானத்தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியைப் பார்வையிடுவார். அத்துடன், போராட்டக்காரர்களையும் அவர் சந்தித்துப் பேசுவார் என்று அறியவருகின்றது.

இதன் பின்னர், வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் வடக்கின் 5 மாவட்டங்களின் அரச அதிபர்களை ஆளுநர் செயலகத்தில் அவர் சந்தித்துப் பேசவுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

தெரிவு செய்யப்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார் என்றும் தெரிய வருகின்றது.

இதனைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் தமிழ் பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட முக்கிய தரப்புக்களை இரவு உணவுடன் அவர் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்றும் அறியவருகின்றது.

எனினும், ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் யாழ்ப்பாணம் வருகைக்கான நிகழ்ச்சி நிரல் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளதுடன், அவரின் வருகைக்கான முழு ஏற்பாடுகளையும் ஐ. நா. வதிவிடப் பிரதிநிதி பணிமனையே மேற்கொண்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் இன்றைய தினம் கண்டி, திருகோணமலை பயணத்தை முடித்துக்கொண்டே யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

முன்னதாக, ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணி மனிதப் புதைகுழிக்கும் நாட்டில் பயணிக்க விரும்பும் சகல பகுதிகளுக்கும் செல்வதற்கு தாம் எந்தவிதமான தடைகளையும் விதிக்கப் போவதில்லை என்று அநுர அரசு அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதியின் பணிமனை வரையில் போராட்டம் நடைபெறும். அங்கு போராட்டக்காரர்களால் மனு கையளிக்கப்படும்.

இதனிடையே, மனித சங்கிலிப் பேரணி நீளும் வழியில் தியாகி திலீபனின் நினைவிடத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்படும். இதேபோன்று, தமிழாராய்ச்சி படுகொலை நினைவிடம், யாழ். நூலகம், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுச் சதுக்கம் ஆகிய இடங்களிலும் சுடர் ஏற்றப்படும். அதன் பின்னர், அணையா விளக்கு காற்றுடனும் நீருடனும் கலக்கப்படும்.

மேலும், இன்று முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு அனைவரின் ஆதரவையும் ஏற்பாட்டுக் குழுவான மக்கள் செயல் குழு கேட்டுள்ளது.

# ஐ.நா. ஆணையாளரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் திருகோணமலையில் இன்று அமைதிவழிப் போராட்டம்

(எஸ்.கீதபொன்கலன்)




ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் திருகோணமலை விஜயத்தை முன்னிட்டு அவரை வரவேற்கும் முகமாகவும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் அவசரமான மனித உரிமை நிலைமைகள் மற்றும் குறைபாடுகளை அவருடைய கவனத்துக்குக் கொண்டு செல்லவும் அமைதியான கவனவீர்ப்பு நடவடிக்கை ஒன்று இன்று திருகோணமலையில் மேற்கொள்ளப்படவுள்ளது என்று அதன் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தக் கவனவீர்ப்பு நடவடிக்கையைப் பாதிக்கப்பட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தினர், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் வடக்கு - கிழக்கு சமூக இயக்கத்தினர் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இன்று புதன்கிழமை திருகோணமலைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில் அவருடைய கவனத்தை ஈர்க்கும் முகமாக யுபிலி மண்டபத்தின் முன்பாக காலை 8 மணியளவில் பாதிக்கப்பட்ட சமூகங்கள், குடிமைப் பூர்வ அமைப்புகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இணைந்து இந்தக் கவனவீர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

இதன்போது, இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இன அழிப்பை விசாரித்து குற்றவாளிகளை வழக்குப் பூர்வமாகத் தண்டிக்க ஒரு சர்வதேச குற்றவியல் நீதித்துறை முறைமை அமைக்கப்பட வேண்டும், செம்மணி, கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கூட்டு மனிதப் புதைகுழி விடயம் தொடர்பாக சர்வதேச நீதிமன்ற மற்றும் நிபுணத்துவக் குழுக்களுக்கு அணுகுவதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும், இலங்கையைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு அல்லது சர்வதேச நீதிமன்றத்துக்கு - போர் குற்றங்கள், மனிதத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இன அழிப்பு குற்றங்கள் ஆகியவற்றுக்காகப் பரிந்துரை செய்ய வேண்டும், தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழும் பிரதேசங்களில் அரசால் முன்னெடுக்கப்படும் நில அபகரிப்புகளை உடனடியாக நிறுத்தி, உரிய உரிமையாளர்களுக்கு நிலங்களை மீளளிக்க வேண்டும், தமிழ் மரபு மற்றும் பண்பாட்டுத் தளங்களை அழிக்கும் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே? அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா?, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நடத்திய இலங்கை பொறுப்புக்கூறும் திட்டம் - 1948இல் தொடங்கிய தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறையின் மற்றும் இன அழிப்பின் முழு வரலாற்றையும் உள்ளடக்கி அறிக்கையிட வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்நிறுத்தி அமைதியான முறையில் கவனயீர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொறுப்புக்கூறலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கிடம் கோரியுள்ளார்.

நேற்று மாலை கொழும்பில் நடைபெற்ற, ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளருடனான சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது, ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் 47 உறுப்பு நாடுகளின் தலைவர்களுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், வணபிதா ஆம்ஸ்ரோங் அடிகளார், சிவில் சமூக பிரதிநிதிகள் உள்ளிட்டோரின் கையொப்பங்களுடன் அனுப்பப்பட்ட 2021.01.15 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிட்ட விடயங்களை மேற்கோள் காட்டி தனது கோரிக்கையை முன்வைத்த சிறீதரன் எம்.பி., எழுத்துமூல கோரிக்கை ஒன்றையும் ஆணையாளரிடம் நேரில் கையளித்துள்ளார்.

அந்தக் கோரிக்கைக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து, அடுத்தடுத்து ஆட்சிப் பீடம் ஏறிய அனைத்து அரசுகளும் சிங்கள - பௌத்த பெரும்பான்மைவாதத்தை நிறுவனமயமாக்கி, ஈழத்தமிழர்களின் அடையாளத்துவ வாழ்வை சிதைத்து, சுயாட்சி மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை அடியோடு இல்லாமல் செய்தன. இதற்காக நீண்ட காலம் ஈழத்தமிழர்களால் முன்னெடுக்கப்பட்ட அமைதியான ஜனநாயக எதிர்ப்புப் போராட்டங்கள் கொடூரமாக அடக்கப்பட்ட பின்னர், ஆயுத மோதல் ஏற்பட்டிருந்ததுடன், அதன் உச்சமாக 2009 மே மாதத்தில் முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை என்ற இனப் பேரவலம் நிகழ்ந்திருந்தது.

போருக்குப் பின்னரும் தமிழர் தாயகப் பகுதிகள் பெரிதும் இராணுவமயமாக்கப்பட்டு, நில அபகரிப்புகள், மக்கள் தொகை மறுசீரமைப்பு, பொருளாதார புறக்கணிப்பு மற்றும் கலாசார அழிப்பு என்பவை தமிழ்த் தேசியத்தை அழிப்பதற்கான ஆயுதங்களாக அரசாலும், அரச படைகளாலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தற்போதைய ஆட்சியின் கீழும், இந்த அடக்குமுறை நடவடிக்கைகளை நிறுத்தவோ அல்லது மாற்றியமைக்கவோ புதிய அரசாங்கம் எந்த அர்த்தமுள்ள நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 (2015) மற்றும் 46/1 (2021) தீர்மானங்கள் உள்ளிட்ட தொடர்ச்சியான தீர்மானங்களை ஏற்றுக் கொண்டாலும், அவை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளையும், செய்யப்பட்ட குற்றங்களின் வீரியத்தையும் ஈடுசெய்யத்தக்கவையல்ல என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். அதேவேளை இலங்கை அரசு OHCHR ன் OSLAP திட்டத்தை தடையின்றி அணுகுவதைத் தொடர்ந்து மறுத்து வருகின்றது. இனப்படுகொலை, போர்க் குற்றங்கள் மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் குறித்த ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான சர்வதேச முயற்சிகளையும் தடுக்கிறது.

இத்தகைய உள்ளக அரசியல் நிலைமாறுதல்களை கடந்து, ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது தீர்மானங்களுக்கு அப்பால் நகர்ந்து, தமிழினப் படுகொலை விவகாரத்தை ஐ.நா. பொதுச் சபைக்கும், ஐ.நா பாதுகாப்பு பேரவைக்கும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கும் கொண்டு செல்லும் தெளிவான குறிக்கோளுடன் கூடிய சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்றை செயற்படுத்த வேண்டுமென தங்களை தயவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

நீதிக்கான பாதைகளை திறப்பதில் ஏற்படும் தாமதம், இலங்கை அரசுக்கும் தமிழினப் படுகொலையாளிகளுக்கும் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கான தைரியத்தை அதிகரிக்கும் சமநேரத்தில் ஈழத் தமிழர்கள் தங்கள் தாயகத்தில் ஒரு தேசமாக அழிக்கப்படுவதையும் துரிதப்படுத்தும் என்ற அடிப்படையில் நீதி, உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவை தாமதிக்கப்படாதிருப்பதை தங்கள் கொள்கை ரீதியான தலைமைத்துவம் உறுதிசெய்ய வேண்டும்.” - என்றுள்ளது.



# இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் ஜனாதிபதியின் செயலாளருடன் சந்திப்பு

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்கவுக்கும் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

தற்போது வங்கித் துறையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், அதற்கு வழங்கக் கூடிய தீர்வுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அனைவரும் ஏற்றுக்கொள் எக்கூடிய, கொள்கை ரீதியான பொறிமுறையின் அவசியத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் (சட்டம்), சிரேஷ்ட சட்டத்தரணி ஜே.எம். விஜேபண்டார, ஜனாதிபதி மக்கள் தொடர்பு பணிப்பாளர் நாயகம் டீ. கமகே ஆகியோருடன் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.













# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நியாயமான கோரிக்கை

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை எனக் கருதப்படும் யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் பொறுப்புக் கூறலை முன்னெடுக்க வைக்கும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் தொடர் முயற்சியின் ஒரு கட்டமாக அவர் - வோல்கர் டர்க் - தற்போது இலங்கைக்கு வந்திருக்கிறார்.

படையினரால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் புதைக்கப்பட்டனர் எனக் கருதப்படும் செம்மணி மனிதப் புதைகுழியை ஒட்டி தமிழ் மக்களின் 'அணையாத தீபம்' போராட்டம் உறுதியாக முன்னெடுக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார். அவர் செம்மணிப் புதைகுழி பிரதேசங்களையும் நேரில் பார்வையிட இருக்கிறார்.

இந்தச் சமயத்தில் ஈழத் தமிழர்களுக்கு நீதி வேண்டி வலுவாகக் குரல் எழுப்பி வரும் கனேடியத் தமிழர் பேரவை நேற்று முன்தினம் அவசர அறிக்கை ஒன்றின் மூலம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் சில கோரிக்கைகளை முன் வைத்திருக்கின்றது.

''செம்மணிப் புதைகுழிப் பகுதிக்கான உங்கள் வருகை இலங்கை அதிகாரிகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஒரு சக்திவாய்ந்த செய்தியை அனுப்பும். இது பிரச்சினையின் தீவிரத்தை வலுப்படுத்தும். இந்த செம்மணிப் புதைகுழித் தளம் மற்றும் அறியப்பட்ட அனைத்து வெகுஜன புதைகுழி தளங்களிலும் விரிவான, பாரபட்சமற்ற மற்றும் சர்வதேச மேற்பார்வையிலான விசாரணையை நடத்துவதன் முக்கிய அவசியத்தை இலங்கை அரசாங்கத்திற்கு உணர்த்துமாறு உங்களை வலியுறுத்துகிறோம்.

செம்மணியில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப அகழ்வில், குழந்தைகள் உட்பட குறைந்தது பத்தொன்பது பேரின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது இலங்கையின் கடந்த காலப் போரின் போது நடந்த மனித உரிமை மீறல்களை அப்பட்டமாக நினைவூட்டுகிறது. இருப்பினும், அரசாங்கத்தின் வரலாற்றைக் கருத்தில் கொண்டால், இந்த விசாரணை மேலோட்டமாகவோ அல்லது வேண்டுமென்றே தடை செய்யப்பட்டதாகவோ, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதி மறுக்கப்பட்டு, தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்படாமல் இருக்க அனுமதிக்கப்படும் போக்கே தொடரும் என்ற நியாயமான கவலை உள்ளது. செம்மணி ஒரு தனிமைப்படுத்தப்பட்ட ஒரு புதைகுழி அல்ல. இப்படி உண்மைகள் அம்பலப்படுத்தப்படாமல் மூடி மறைக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளின் வரிசையில் இது இப்போது கடைசி.

1990 களில் அரசாங்கப் படைகளால் நடத்தப்பட்ட நீதிக்குப் புறம்பான கொலைகள் தொடர்பான கடுமையான குற்றச்சாட்டுகளுடன் செம்மணி தளம் வரலாற்று ரீதியாக தொடர்புடையது, மேலும் இந்த விசாரணை இறுதியாக அதன் தற்போதைய கட்டத்தை அடைய ஏற்கனவே மூன்று தசாப்தங்களுக்கும் மேலாகிவிட்டது. இனி தாமதங்கள் இருக்க முடியாது. சாக்குப்போக்குகள் இருக்க முடியாது. அரைகுறை நடவடிக்கைகளுக்கு இடமில்லை.

முழுமையான மற்றும் முழுமையானது மட்டுமல்லாமல், முற்றிலும் வெளிப்படையான மற்றும் சுயாதீனமான சர்வதேச மேற்பார்வைக்கு உட்பட்ட விசாரணைக்கு இலங்கை அரசு உறுதியளிக்க வேண்டும். செம்மணி மற்றும் பிற மனிதப் புதைகுழிகள் பற்றிய விடயங்கள் பொறுப்புக் கூற வைத்தல் தொடர்பான உங்களின் இறுதி அறிக்கையில் விவரமாக சேர்க்கப்படுவதை உறுதி செய்யுமாறு நாங்கள் உங்களை மேலும் கேட்டுக் கொள்கிறோம்.'' - என்ற சாரப்படக் கோரப்பட்டுள்ளது.

உரிய சமய சந்தர்ப்பத்தில் முன் வைக்கப்படும் நியாயமான கோரிக்கை இது.



# ‘பிரஜாசக்தி’ தேசிய வேலைத்திட்டம் ஜுலை 04 ஆம் திகதி ஆரம்பம்

சமூகத்தை வலுவூட்டல் மற்றும் பொருளாதார நன்மைகளை நியாய மானமுறையில்பகிர்ந்தளிக்கப்படுதலை உறுதிப்படுத்தும் வகையில் தற்போதைய அரசாங்கத்தினால் நடைமுறைப் படுத்தப்படும் ‘பிரஜாசக்தி’ தேசிய வேலைத்திட்டம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் ஜுலை 04 ஆம் திகதி அலரி மாளிகையில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கு அவசியமான திட்டமிடல் மற்றும் ஏற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் பிரஜாசக்தி தேசிய செயற் படுத்தல் குழுவின் முதல் கலந்துரை யாடல், அந்தக் குழுவின் தலைவர், கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர் உபாலி பன்னிலகே மற்றும் ஜனாதிப தியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரின் பங் கேற்புடன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

பிரஜாசக்தி செயற்படுத்தல் குழுவில் அமைச்சுகளின் செயலாளர்கள் 09 பேர் மற்றும் மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் அங்கம் வகிக்கின்றனர். குழுவின் செயலாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளராக ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் (அபிவிருத்தி நிர்வாகம்) செயல்படுவார். அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையின்படி, இத்திட்டம் சமூக வலுவூட்டல் திட்டமாக பல்முனை அணுகுமுறையுடன் செயல்படுத்தப்ப டுகிறது.

அரசாங்கத்தின் கீழ் செயல்படுத்தப் படும் தேசிய அளவிலான திட்டங்கள் 03 இல், பொருளாதார அபிவிருத்தியின் நன்மைகள் சமூகத்தின் அனைத்து பிரிவுகளிடையேயும் சமமாக பகிர்ந் தளிக்கப்படுதலை உறுதி செய்தல், இலக்குமயப்பட்ட அபிவிருத்தியின் ஊடாக கிராமப்புறங்களை முழுமை யான அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அதன்படி, நாட்டில் செயல்படுத் தப்பட்ட மற்றும் ஏற்கனவே செயல் படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த சமூக வலுவூட்டல் திட்டங்களை வேறு பட்ட அணுகுமுறை மூலம் செயல் படுத்தும் நோக்கில் ‘பிரஜாசக்தி’ தேசிய வேலைத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த திட்டம் அனைத்து மட்டங்க ளிலும் நாட்டின் அபிவிருத்தி தேவை களை அடையாளம் காணுதல், கொள்கை உருவாக்கம், செயல்படுத்தல் மற்றும் கண்காணிப்பு உட்பட முழு செயல்முறைக்கும் பங்களிக்கும் வகை யில் புதிய கட்டமைப்புகளை அறி முகப்ப டுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி மன்றங்களின் வகிபாகம், திறன் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பிரஜாசக்தி சபைகளை நிறுவுதல் தொடர்பிலும் இங்கு விரிவாக கலந்து ரையாடப்பட்டுள்ளது.














# மருதமடு அன்னையின் ஆலயக் கொடியேற்றம்

**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மறைமாவட்டத்தில் புனித யாத்திரிகர் ஸ்தலமாக விளங்கும் மருதமடு அன்னையின் உற்சவப் பெருவிழா ஜூலை 2 ஆம் திகதி நடைபெற இருப்பதை முன்னிட்டு நேற்று முன்தினம் திங்கள்கிழமையன்று மடு அன்னை ஆலயத்தில் கொடியேற்றம் இடம்பெற்றது.

மடு பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாப்பரசர் கொடியை மன்னார் ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையும், மருதமடு அன்னையின் கொடிகளை மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆண்டகை மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையும், மடு பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளாரும் ஏற்றி வைத்தனர்.

ஜூலை இரண்டாம் திகதி நடைபெற இருக்கும் மடு அன்னையின் பெருவிழாவுக்காக இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் தற்பொழுது பல நூற்றுக் கணக்கான மக்கள் வருகை தந்திருக்கும் நிலையில் அவர்கள் இந்த கொடியேற்ற நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த கொடியேற்றத்தைத் தொடர்ந்து ஒன்பது தினங்கள் பிற்பகல் நவநாட்கள் இடம்பெறும் என்பதும் குறிப்பிடத்தக்கது.







# மெழுகுதிரியின் தீ ஆடையில் பற்றியதால் ஒருவர் உயிரிழப்பு

**(எஸ்.ரகுதீஸ்)**

நோயினால் பீடிக்கப்பட்டு படுக்கையில் இருந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் மெழுகுதிரியின் தீ ஆடையில் பற்றியதால் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அம்பலவாணர் நாகேந்திரம் (வயது 60) என்பவராவார்.

கடந்த இரவு மின் தடையேற்பட்ட போது மெழுகுவர்த்தி ஏற்றியிருந்த போது படுக்கையில் இருந்தவரின் ஆடையில் தீப்பிடித்தில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டி ருந்த நிலையில் கடந்த திங்கள் கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந் துள்ளார்.

இம்இந்த மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை வட்டுக்கோட்டை பொலிஸார் நெறிப் படுத்தினர்.





# யாழ் மாவட்ட அரச அதிபராக பிரதீபன் சம்பிரதாயபூர்வமாகப் பொறுப்பேற்பு!

யாழ் மாவட்ட அரச அதிபராக மருதலிங்கம் பிரதீபன் நேற்றையதினம் சம்பிரதாயபூர்வமகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட நிலையில் அவருக்கு சக ஊழியர்களால் வரவேற்பும் அளிக்கப்பட்டது

இந்தப் பதவியேற்பு நிகழ்வு யாழ் மாவட்ட செயலகத்தில் மேலதிக மாவட்ட அரச அதிபர் ஸ்ரீமோகன் தலைமையில் மதத் தலைவர்கள், மாவட்ட செயலக ஊழியர்கள், பிரதேச சபையின் செயலர்கள் மற்றும் யாழ் மாவட்டத்தின் பல் துறைசார் பொறுப்பு நிலை அதிகாரிகள் பிரசன்னத்துடன் நடைபெற்றது.

முன்பதாக மாவட்ட செயலகத்துக்கு தனது பாரியாருடன் வருகைதந்த மாவட்டச் செயலாளரை, மேலதிக மாவட்ட அரச அதிபர் ஸ்ரீமோகன் கைலாகு கொடுத்து மாலை அணிவித்து வரவேற்றிருந்தார்.

அதைத்தொடர்ந்து சக ஊழியர்களால் வரவேற்கப்பட்ட அரச அதிபர் பிரதீபன் மாவட்ட செயலரின் அதிகாரபூர்வ அலுவலகத்தில் கடமைகளை பொறுப்பேற்றிருந்தார்.

யழ் மாவட்டத்தில் பல மாதங்களாக மாவட்ட அரச அதிபர் வெற்றிடம் இருந்து வந்த நிலையில் பதில் அரச அதிபராக கடமையாற்றி வந்த ம.பிரதீபன் சில தினங்களுக்கு முன்னர் யாழ் மாவட்டத்தின் அரச அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார்.

அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் நியமிக்கப்பட்ட பிரதீபனுக்கான நியமனக் கடிதம் கடந்த 20 ஆம் திகதியன்று அமைச்சரவை செயலாளர் டபிள்யூ.எம்.டி.ஜே.பெர்னாண்டோவினால் வழங்கப்பட்டிருந்தது.

ம.பிரதீபன் 2024 மார்ச் 09 ஆம் திகதி முதல் யாழ்ப்பாண மாவட்டத்தின் பதில் அரசாங்க அதிபராக கடமையாற்றி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது .














# நீர் தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக உயர்வு

(மஸ்கெலியா நிருபர்)

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் கன மழை காரணமாக நீர் தேக்கங்களின் நீர் மட்டம் அவற்றின் கொள்ளளவை எட்டியுள்ளது.

காசல்றி நீர் தேக்கத்தின் நீர் மட்டம் இன்னும் மூன்று அடி மட்டுமே நிரம்ப வேண்டி உள்ளது.

மவுஸ்சாகலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவு 120 அடியை எட்ட இன்னும் 5 அடி மட்டுமே நிரம்ப வேண்டி உள்ளது.

அதேபோல் ஏனைய நீர் தேக்கங் களின் நீர் மட்டங்களும் அவற்றின் கொள்ளளவை எட்டியுள்ளன.

கென் யோன், லக்சபான, பொல்பிட் டிய, நவலக்சபான, கலுகல, விமல சுரேந்திர ஆகியவை இவற்றில் அடங்கும்.

தொடர்ந்து மழை பெய்து வரும் பட்சத்தில் மவுஸ்சாகலை, காசல்ரீ, மேல் கொத்மலை ஆகிய நீர் தேக்கங் களின் நீர் வான் பாய வாய்ப்பு உள்ளது என நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் அதிக அளவில் குளிரான காலநிலை நிலவுகிறது.

# மயிலிட்டி கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை

மயிலிட்டி வீரமாணிக்க தேவன்துறை அருள்மிகு கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 19 நாள்கள் இடம்பெற உள்ளது.

13 ஆம் திருவிழாவாக சப்பை ரத திருவிழா எதிர்வரும் ஜுலை 08 ஆம் திகதியும், தேர்த்திருவிழா 09 ஆம் திகதியும் சமுத்திர தீர்த்தம் 10 ஆம் திகதியும் இடம்பெற உள்ளன.

தேர்த்திருவிழாவிற்காக புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வரும் ஜுலை 07 ஆம் திகதி வெள்ளோட்டம் இடம்பெற உள்ளது.

தொடர்ந்து ஜுலை 11 ஆம் திகதி பூங்காவனமும், 12 ஆம் திகதி தெப்பத் திருவிழாவும் இடம்பெற்று 14 ஆம் திகதி நிறைமணித்திருவிழாவுடன் நிறைவுபெற உள்ளது.

அலங்கார திருவிழா காலத்தில் தினமும் காலை 10.30 மணிக்கு அபிசேகம் இடம்பெற்று, மதியம் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும். மாலை 6 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம்பெற்று அம்பாள் உள்வீதி வெளிவீதி வலம்வருவார்.

தேர்த் திருவிழா அன்று விசேட தவில் நாதஸ்வர கச்சேரி இடம்பெற உள்ளது. உலகப்புகழ் பெற்ற கோண்டாவில் நாதஸ்வர வித்துவான், நாதஸ்வர இளவரசன், நாதஸ்வர கலாநிதி பஞ்சமூர்த்தி குமரன் குழுவினர், மல்லாகம் நாதஸ்வர வித்துவான் நாதகாணவாருதி ட.பானுசங்கர் குழுவினர், பஞ்சாபிகேசனின் பேரப் பிள்ளைகளான வி.சித்தார்த்தன், வி.பிரதித்தன் குழுவினர் இணைந்து விசேட தவில் நாதஸ்வர கச்சேரி நடத்த உள்ளனர்.




# கொழும்பில் இலத்திரனியல் ஒலிபரப்பு மாநாடு

(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)

இலங்கை இலத்திரனியல் ஒலிபரப்பாளர்களின் சங்கமும், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இலத்திரனியல் ஒலிபரப்பு மாநாடு (Broadcasting Symposium) இன்று புதன்கிழமை கொழும்பில் நடாத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள் ளன என சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் மேல திக செயலாளர் என்.ஏ.கே.எல்.விஜேநாயக்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தி னம் திங்கட்கிழமை நடைபெற்ற மேற்படி மாநாடு குறித்து தெளிவூட்டும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

இலத்திரனியல் ஒலிபரப்பில் தற்போதைய சவால்கள் மற்றும் புதிய போக்குகள், புதிய ஊடகங்களின் வருகை யுடன் ஊடகத் துறையில் எழுந்துள்ள சவால்கள் மற்றும் ஊடகக் கொள்கைகள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக் கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், எதிர்காலத்தில் இலங் கையை ஒலிபரப்புக்கான மையமாக மாற்றுவதே இதன் நோக்கம் என்றும் சுட்டிக்காட்டினார்.

# கொழும்பு மத்திய பஸ் நிலையத்தை நவீனமயப்படுத்த அரசாங்கம் திட்டம்



க்ளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத் திற்கு இணையாக கொழும்பு மத் திய பஸ் நிலையத்தை ஒரு வருடத்தில் நவீனமயப்படுத்த அரசாங்கம் திட்ட மிட்டுள்ளது.

இதற்கு இணையாக நாடளாவிய ரீதியில் 50 பிரதான பஸ் நிலையங் களை நவீனமயப்படுத்தவும் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்திற்காக விமா னப்படையின் ஆதரவு பெற்றுக்கொள் ளப்படவுள்ளது.

# பொரளையில் துப்பாக்கிச் சூடு

பொரளையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 5.45 மணி யளவில் துப்பாக்கிச் சூடு சம்பவம் நிகழ்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இரண்டு துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என தெரிவிக் கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பிறகு தப்பிச் சென்றுள்ளார் என பொரளை பொலிஸார் தெரிவித்துள் ளது.

துப்பாக்கிச் சூடு நடத்த வந்த நபர்கள் குறித்து இதுவரை எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை, மேலும் பொரளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# வவுனியா ஏ9 வீதியில் 2 மாதங்கள் கடந்தும் பூர்த்தி செய்யப்படாத நிலைமையில் பாலம்!

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை அசமந்தம்

(கி.வசந்தன்)

வவுனியா ஏ9 வீதியில் பாலம் அமைக்கும் பணி தாமதமடைந்துள்ளமையால் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஏ9 வீதியில் வவுனியா மாநகரசபை மைதானத்திற்கு முன்பாக உள்ள பகுதியில் இருந்த பழையபாலம் அகற்றப்பட்டு புதிய பாலம் அமைக்கும் பணி கடந்த ஏப்ரல் மாதம் முன்னெடுக்கப்பட்டது.

பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு மாதங்கள் கடக்கின்ற நிலையில் பாலம் பூர்த்தி செய்யப்படாமையினால் அந்த வீதியூடாக போக்குவரத்துச் செய்யும் பொதுமக்களும் வாகனமோட்டிகளும் கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இந்தப் பாலம் பிரதான வீதியில் அமைந்துள்ளமையினால் அதிகமான வாகனங்கள் அந்த வீதியை பயன்படுத்தி வருகின்றன. இந்த சூழ் நிலையில் பாலம் அமைக்கும் பணி தாமதமாகின்றமையால் அந்த பகுதியில் தினமும் நெருக்கடி நிலை ஏற்பட்டு வருகின்றது.

எனவே, இந்த விடயத்தில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.



# யாழ். பாத யாத்திரீகர்கள் நேற்று கதிர்காமத்தை சென்றடைந்தனர்

(வி.ரி.சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட யாழ் கதிர்காமம் பாதயாத்திரீகர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை 56 ஆவது நாளில் கதிர்காமக் கந்தன் ஆலயத்தைச் சென்றடைந்தனர்.

யாழ்.செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கடந்த மே மாதம் முதலாம் திகதி புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் 56 தினங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு திருகோணமலை, அம்பாறை, மொனராகலை ஆகிய ஆறு மாவட்டங்களைக் கடந்து நேற்றுக் காலை செல்லக்கதிர்காமத்தில் பிரவேசித்துள்ளனர்.

அவர்கள் நாளை 26 ஆம் திகதி கொடியேற்றத்தில் பங்கேற்பாளர்கள்.








# வெண்கலச்செட்டிகுளம் பிரதேசசபையில் ஆட்சியமைக்க இணக்கப்பாடு ஏற்பட்டது

## நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தகவல்

(கி.வசந்தன்)

வவுனியா வெண்கலசெட்டிகுளம் பிரதேசசபையில் ஆட்சியமைப்பதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

இன்றைய தினம் வெண்கலசெட்டிகுளம் பிரதேசசபையின் தவிசாளர், உபதவிசாளர் தெரிவு இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் அங்கு ஆட்சி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று தமிழரசுக்கட்சியின் வவுனியா அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

அகில இலங்கை மக்கள்காங்கிரஸ்(ஐக்கியமக்கள் சக்தி), இலங்கைத் தமிழரசுக்கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி, ஸ்ரீரெலோ (ஜனநாயக தேசியகூட்டணி) ஆகிய கட்சிகளிற்கிடையில் ஏற்ப்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் செட்டிகுளம் பிரதேசசபையில் ஆட்சியமைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெத்துள்ளோம்.

அந்த வகையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் செட்டிகுளம் பிரதேச சபையின் தவிசாளராகப் பெயர் பிரேரிக்கப்படவுள்ளதுடன், உபதவிசாளராக தமிழரசுக்கட்சியின் உறுப்பினர் ஒருவரது பெயரும் பிரேரிக்கப்படவுள்ளது.

அந்தவகையில் செட்டிகுளம் பிரதேசசபையின் ஆட்சியை எமது கூட்டு நிச்சயமாக கைப்பற்றும்.

பலதேவைகள் அந்த பிரதேசத்தில் இருக்கின்றன. அந்தத் தேவைகளை தீர்ப்பதற்கான முயற்சியை இந்தக் கட்சிகள் கூட்டாக மேற்கொள்ளும்.

வவுனியா வடக்கு பிரதேச சபையிலும் ஆட்சி அமைப்பதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெத்துள்ளோம். அந்த சபையின் தவிசாளர் யார் என்பது தொடர்பாக பல கருத்துக்கள் உள்ளன. அவற்றை நாம் ஆராய்ந்து பொருத்தமான முடிவினை எடுப்போம் என்றார்.

குறித்த கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் முத்துமுகமது, சிறிரெலோ கட்சியின் செயலாளர் ப.உதயராசா உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

# வியாழேந்திரனுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடை நீக்கம்



லஞ்ச ஒழிப்பு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள, முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பயணத் தடையை, கொழும்பு நீதவான் நீதிமன்றம் தற்காலிகமாகத் தளர்த்தியுள்ளது.

இந்த குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு, கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் அழைக்கப்பட்டதுடன், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் உள்ளிட்ட 3 பிரதிவாதிகளும் நீதிமன்றில் பிரசன்னமாகியிருந்தனர்.

தமது சேவை பெறுநரான எஸ்.வியாழேந்திரன், சிகிச்சைகளுக்காக எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி வரை இந்தியாவுக்கு செல்ல வேண்டியுள்ளதாகப் பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி காலிங்க இந்ததிஸ்ஸ மன்றுரைத்தார்.

எனவே, முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனுக்கு விதிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயணத்தடையை தற்காலிகமாக நீக்குமாறு, இதன்போது சட்டத்தரணி கோரிக்கை விடுத்தார்.

எனினும் இதற்கு கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழு சார்பில் மன்றில் முன்னிலையான அதிகாரிகள் எதிர்ப்பை வெளியிட்டனர்.

சந்தேகநபர் வெளிநாட்டுக்குச் செல்வாராயின் அவரை மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதில் சிக்கல் ஏற்படும் எனவும் அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

எனினும், இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த நீதவான், முன்னாள் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனுக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டுப் பயணத் தடையைத் தற்காலிகமாகத் தளர்த்த உத்தரவிட்டுள்ளார்.










# மன்னார் மாவட்டத்திற்குரிய துறைமுகம் பேசாலையில் என்று அமைச்சர் தகவல்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

இந்திய மீனவர்களின் அத்து மீறலை முற்று முழுதாக தடுக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது எனவும், மன்னார் மாவட்டத்திற்குரிய துறைமுகம் பேசாலையில் அமைய உள்ளது எனவும் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் மன்னார் மாவட்ட கடற்றொழில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவ சமூகத்தினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இந்த கூட்டம் முடிவடைந்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில் அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

கடற்படையினரால் கையகப் படுத்தப்பட்டுள்ள காணிகளை

தொடர்ச்சி▼















# மன்னார் மாவட்டத்திற்குரிய துறைமுகம் பேசாலையில் என்று அமைச்சர் தகவல்

தொடர்ச்சி▲

விடுவிப்பது பற்றியும் பேசப்பட்டது. அதற்குரிய நடவடிக்கையை கடற்படையினர் எடுப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

மன்னார் மாவட்டத்துக்கென துறை முகமொன்று கிடையாது. எனவே, பேசாலையில் துறைமுகமொன்றை அமைப்பதற்கு திட்டமிட்டு, அதற்குரிய நடவடிக்கை இடம்பெறுகின்றது. எனினும், இந்த துறைமுகம் தொடர்பில் மக்கள் மத்தியில் சந்தேகம் உள்ளது.

அந்த சந்தேகத்தை நாம் நீக்க வேண்டும். அரசாங்க அதிபர், அதிகாரிகள் உள்ளிட்டோர் மக்களை சந்தித்துக் கலந்துரையாடி, துறைமுகத்தின் முக்கியத்துவம் பற்றி விளக்கமளிக்க வேண்டும்.

அதேவேளை, இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு தொடர்பிலும் பேசப்பட்டது. இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்துமாறு மீனவர்கள் கோரிக்கை விடுத்தார்கள்.

அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு கடற்படையினரும் உரிய பங்களிப்பை வழங்கி வருகின்றனர். எதிர்காலத்தில் இந்திய மீனவர்களின் வருகையை முற்று முழுமையாக நிறுத்த முடியும் என நம்புகின்றோம். இராஜதந்திர மட்டத்திலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது." – என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மேலும் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர் ரத்ன கமகே –

வடக்கு, கிழக்கில் மீனவர்களை சந்தித்து வருகிறோம். மாவட்ட, மாகாண மட்டத்தில் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன.

மன்னார், பேசாலையில் 2026 இல் மீன்பிடி துறைமுகம் அமைக்கப்படும். இதற்கு உலக வங்கி ஆதரவு பெறப்படும். அதேபோல் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீர்க்கப்படும். – என்றார்.

இந்திய மீனவர்களின் வருகை தற்போது குறைந்துள்ளதாகக் குறிப்பிட்டு, அதற்கு நடவடிக்கை எடுத்த அமைச்சர்கள் மற்றும் கடற்படையினருக்கு மன்னார் மாவட்ட மீனவ பிரதிநிதிகள் இதன்போது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் மேலதிக செயலாளர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், கடலோரப் பாதுகாப்பு திணைக்களம், பொலிஸ், சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் பல முக்கிய கடற்றொழில் அமைப்புகளின் பிரதிநிதிகள், அத்துடன் கடற்றொழில் அமைச்சின் கீழ் உள்ள இலங்கை கடற்றொழில் துறைமுக கூட்டுத்தாபனம், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம், நாரா (யேசுய) நிறுவனம் மற்றும் நெக்டா (யேஞனுய) நிறுவனம் ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் தலைவர்களும் கலந்து கொண்டனர்.









# புகைத்தல் அற்ற பிரதேசத்தை உருவாக்க மாந்தை மேற்கில் விழிப்புணர்வுப் பேரணி

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார், மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் புகைத்தலுக்கு எதிரான விழிப்புணர்வு நடைபவனி நேற்றைய தினம் மாந்தை பொது சுகாதார வைத்திய அதிகாரி ஒஸ்மன் டெனி தலைமையில் அடம்பன் பாடசாலையில் இருந்து பிரதேச செயலகம் ஊடாக நகர்ப் பகுதி வரை இடம் பெற்றது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் புகைத்தலுக்கு எதிரான மனநிலையை உருவாக்கும் முகமாகவும், அதே நேரம் பாடசாலை சூழலில் புகைத்தலுடன் தொடர்பு பட்ட பொருள்களின் விற்பனையைத் தடை செய்யும் முகமாகவும் இந்தப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டு இடம் பெற்றது.

“புகைத்தல் அற்ற பிரதேசத்தை உருவாக்குவோம்” எனும் தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்தப் பேரணியில் பல்வேறு விழிப்புணர்வு வாசகங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகள் வீதிகளின் இரு புறங்களிலும் காட்சிப் படுத்தப்பட்டன. பொது மக்களுக்கும் புகைத்தல் தொடர்பானதுண்டுபிரசுரங்களும்வழங்கி வைக்கப்பட்டன.

அதே நேரம் அடம்பன் பாடசாலை சூழலில் அமைந்துள்ள வியாபார நிலையங்களில் புகைத்தலுடன் தொடர்புடைய எந்தவொரு பொருளையும் விற்பனை செய்வதற்கு எதிரான தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு நடைபவனியில் மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அதிகாரிகள், ஊழியர்கள், மாந்தை பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக ஊழியர்கள், அடம்பன் மகா வித்தியாலய அதிபர் மற்றும் மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.












# ஈரானில் தவிக்கும் தமிழக மீனவர்களை மீட்கக் கோரி முதல்வர் ஸ்டாலின் கடிதம்

ஈரானில் சிக்கித் தவிக்கும் தமிழக மீனவர்கள் பாதுகாப்பாக இந்தியா திரும்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

ஈரான் - இஸ்ரேல் இடையே போர் தீவிரம் அடைந்து வரும் நிலையில், ஈரானில் சிக்கித் தவிக்கும் தமிழக மீனவர்கள் பாதுகாப்பாக இந்தியா திரும்புவதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதத்தில் முதல்வர் ஸ்டாலின் குறிப்பிடுகையில், "மேற்கு ஆசியாவில் நிலவும் போர்ச் சூழலினால் ஏற்பட்டுள்ள சவால்கள் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த 498 மீனவர்கள், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 78 மீனவர்கள், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 72 மீனவர்கள், ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 3 மீனவர்கள் என மொத்தம் 651 இந்திய மீனவர்கள் ஈரானில் சிக்கித் தவித்து வருகின்றனர். அங்கு அதிகரித்து வரும் போர்ச் சூழல் காரணமாக கடும் சிரமங்களை எதிர்கொண்டு



தமிழகத்துக்கு திரும்ப முடியாமல் இருந்து வருகின்றனர்.

மீனவர்களின் பாதுகாப்பு குறித்து தகவல்கள் ஏதும் இல்லாத காரணத்தால் தாயகத்தில் உள்ள அவர்களது குடும்பத்தினர் ஆழ்ந்த துயரத்தில் உள்ளனர். எனவே ஈரானில் நிலவும் பதற்றமான சூழ்நிலையில் சிக்கியுள்ள மீனவர்கள் பாதுகாப்பாக இந்தியா திரும்ப, மத்திய வெளியுறவு அமைச்சகம் தேவையான தூதரக நடவடிக்கைகளை எடுத்து உதவ வேண்டும். இது பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் மிகுந்த ஆறுதலைத் தரும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# குஜராத்தில் விபத்துக்குள்ளான விமானத்தின் கருப்புப் பெட்டி இந்தியாவில்தான் உள்ளது

## அமைச்சர் ராம் மோகன் நாயுடு தகவல்



குஜராத்தில் விபத்துக்குள்ளான ஏர் இந்தியாவின் ஏ.ஐ. 171 விமானத்தின் கருப்புப் பெட்டி இந்தியாவில்தான் உள்ளது எனவும் அதில் உள்ள தகவல்களைத் திரட்டுவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

கடந்த 12 ஆம் திகதி அகமதாபாத்தில் இருந்து லண்டன் கேட்விக் விமான நிலையம் நோக்கி புறப்பட்ட ஏர் இந்தியாவின் போயிங் 787 ட்ரீம்லைனர் ரக விமானம், புறப்பட்ட சில நிமிடங்களிலேயே கீழே விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில், விமானத்தில் பயணித்த 242 பேரில் 241 பேர் உயிரிழந்தனர். அதோடு, விமானம் மோதிய மருத்துவக் கல்லூரி விடுதியைச் சேர்ந்த மாணவர்கள் உட்பட விமானத்தில் பயணிக்காத 33 பேர் உயிரிழந்தனர்.

விபத்துக்கான காரணம் குறித்து அறியும் நோக்கில், விமானத்தில் இருந்த கருப்புப் பெட்டி கண்டுபிடிக்கப்பட்டது. எனினும், அது தீயில் கடுமையாக சேதமடைந்ததால், அதனை ஆய்வுக்கு அமெரிக்காவுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின.

எனினும், இந்த செய்தி தவறானது என விமான விபத்து புலனாய்வுப் பணியகத்தின் இயக்குநர் ஜெனரல் ஜி.வி.ஜி. யுகந்தர், செய்தி நிறுவனமான ராய்ட்டர்ஸ்"க்கு அனுப்பிய மின்னஞ்சல் செய்தியில் தெரிவித்திருந்தார். எனினும், கூடுதல் விவரங்களை அவர் தெரிவிக்கவில்லை.

இந்நிலையில், விபத்துக்குள்ளான ஏ.ஐ. 171 விமானத்தின் கருப்புப் பெட்டி இன்னும் இந்தியாவில்தான் இருப்பதாகவும், அது குறித்து விமான விபத்துகள் புலனாய்வுப் பணியகம் விசாரித்து வருவதாகவும் அமைச்சர் ராம் மோகன் நாயுடு உறுதிப்படுத்தியுள்ளார்.

# 2,000 கோடி ரூபா மதிப்பிலான இராணுவ தளவாட கொள்வனவு செய்வதற்கு மத்திய அரசு ஒப்புதல்

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான திறனை மேம்படுத்த .2,000 கோடி இந்திய ரூபா மதிப்பிலான கொள்முதல் ஒப்பந்தங்களுக்கு பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

அவசரகாலக் கொள்முதல் தொடர்பான நெறிமுறைகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சகம் 13 ஒப்பந்தங்களை இறுதி செய்துள்ளது. ஒட்டுமொத்தமாக 1,981.90 கோடி இந்தியா ரூபா மதிப்பில் இந்த ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. அவசரகால கொள்முதல் ஆணையின் கீழ் கொள்முதல் நடைமுறைகள் விரைவுப்படுத்தப்படும். பயங்கரவாத செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் பாதுகாப்பு படையினரின் செயல்பாட்டுத் திறன்களை மேம்படுத்துவதை இந்தக் கொள்முதல் நடவடிக்கைகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

கொள்முதல் செய்யப்படும் ஆயுத தளவாடங்கள் விவரம்:

ஒருங்கிணைந்த ட்ரோன் கண்டறிதல் மற்றும் இடைமறிப்பு அமைப்புகள், குறைந்த அளவிலான இலகுரக ரேடார்கள், மிகக் குறுகிய தூர வான் பாதுகாப்பு அமைப்புகள், ஏவுகணைகள், தொலைதூரத்தில் இயக்கப்படும் வான்வழி



வாகனங்கள் (RPAVகள்), செங்குத்தாக மேலெழுந்து சென்று அதே போன்று தரையிறங்கக் கூடிய போர் விமானங்கள், குண்டு துளைக்காத ஜாக்கெட்டுகள், விரைந்து எதிர்வினையாற்றும் கனரக மற்றும் நடுத்தர போர் வாகனங்கள், இரவில் இலக்கை அடையாளம் காணும் வகையிலான துப்பாக்கிகள், இத்தகைய தளவாடங்களை கொள்முதல் செய்வதன் மூலம், அதிகரித்து வரும் பாதுகாப்பு தொடர்பான சவால்களை பாதுகாப்பு படை எதிர்கொள்ள உதவிகரமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானும் இஸ்ரேலும் போர் நிறுத்தத்தை மீறிவிட்டன; டொனால்ட் ட்ரம்ப் சாடல்



போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்ட பிறகு, இஸ்ரேல், ஈரான் இரு நாடுகளுமே அதனை மீறிவிட்டன என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் வவ்ஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப்,

"ஈரானை இஸ்ரேல் தாக்கக் கூடாது. தனது விமானிகளை அத்தகைய பணிகளில் ஈடுபடுத்தக் கூடாது. ஈரான் மீது இஸ்ரேல் குண்டுகளை வீசுமானால், அது மிகப் பெரிய மீறல். எனவே, இஸ்ரேல் அதில் ஈடுபடக்கூடாது. உண்மை என்னவென்றால், இரண்டு நாடுகளுமே போர் நிறுத்த உடன்படிக்கையை மீறியுள்ளன. நேற்று நான் பார்த்த பல விடயங்கள் எனக்குப் பிடிக்கவில்லை. குறிப்பாக, நாங்கள் ஒப்பந்தம் செய்த உடனேயே இஸ்ரேல் குண்டுகளை வீசியது எனக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் குண்டுகளை வீசி இருக்க வேண்டியதில்லை.

இஸ்ரேலின் பதிலடி மிகவும் வலுவாக இருந்தது. அவர்கள் இருவரும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக நான் நினைக்கிறேன். ஈரான், இஸ்ரேல் இரண்டு நாடுகளும் நீண்ட காலமாகவும் கடுமையாகவும் சண்டையிட்டு வருகின்றன. ஒரு நாடு என்ன செய்யும் என்பது மற்றொரு நாட்டுக்குத் தெரியாது. அப்படி ஒரு நிலைமை அங்கு இருக்கிறது. இது உங்களுக்குப் புரிகிறதா?." என்று தெரிவித்தார்.

போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும், இஸ்ரேல் ஈரானை தாக்காது என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறிய சில நிமிடங்களில், ஈரான் தலைநகர் தெஹ்ரானில் வெடிச்சத்தங்கள் கேட்டன. ஈரான் 2 பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவியதற்கு பதிலளிக்கும் விதமாக ஒரு ரேடார் தளத்தை தாங்கள் தாக்கியதாக இஸ்ரேல் கூறியது.

டெல் அவிவ் மீது ஈரான் புதிய ஏவுகணைத் தாக்குதலை நடத்தியதை அடுத்து, இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், ஈரானின் போர் நிறுத்த மீறலுக்கு வலுவாக பதிலளிக்க ஆயுதப் படைகளுக்கு உத்தரவிட்டதாக கூறினார். இருப்பினும், இதனை ஈரான் மறுத்ததோடு, போர் நிறுத்தம் அமலுக்கு வந்த பிறகு இஸ்ரேல் மீது எந்த ஏவுகணையும் ஏவப்படவில்லை என்று அதன் அரசு ஊடகங்கள் தெரிவித்தன.

முன்னதாக, தங்களது 3 முக்கிய அணு சக்தி நிலையங்களை தாக்கி அழித்த அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்க ஈரான் முடிவு செய்தது. அதன்படி, கத்தாரில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்தை குறிவைத்து நேற்று முன்தினம் ஈரான் பாலிஸ்டிக் ஏவுகணைகளை வீசியது. இதன் காரணமாக மத்திய கிழக்கில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. உடனடியாக கட்டார், ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன் உள்ளிட்ட நாடுகள் தங்கள் வான் பரப்பை முழுவதுமாக மூடின.

இதன் தொடர்ச்சியாக, இஸ்ரேல் – ஈரான் இடையிலான 12 நாள்கள் யுத்தம் முடிவுக்கு வருவதாகவும், போர் நிறுத்தத்துக்கு இரு நாடுகளும் ஒப்புதல் அளித்துவிட்டதாகவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட்டு ட்ரம்ப் அறிவித்தார்.

அதன்படியே, இரு நாடுகளும் போர் நிறுத்தம் செய்வதாக உறுதி அளித்தன. எனினும், போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி இரு நாடுகளும் பரஸ்பரம் மோதலை தொடர்வதும், மாறி மாறி குற்றம்சாட்டுவதும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பை பெரும் அதிருப்தி அடையச் செய்துள்ளது கவனிக்கத்தக்கது.

# கம்போடிய எல்லையை மூடியது தாய்லாந்து




பாதுகாப்பு அச்சம் காரணமாக சுற்றுலாப் பயணிகள், வர்த்தகர்கள் உள்ளிட்ட அனைத்து பயணிகளும், கம்போடியாவுக்குள் பிரவேசிக்கும் எல்லைப் பாதைகளை தாய்லாந்து இராணுவம் மூடியுள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான எல்லைப் பிரச்சினை காரணமாகப் பதற்றம் அதிகரித்துவரும் நிலையில், தாய்லாந்து இராணுவம் இந்த நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளது.

தாய்லாந்து மற்றும் கம்போடியா எல்லைப் பகுதியில் ஏற்பட்ட குறுகிய கால ஆயுத மோதல்களால், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, தாய்லாந்து இராணுவத்தின் நடவடிக்கைகள் குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -25.06.2025




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமான பலன்களை அளிக்கும்.

நீங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். பணியிடத்தில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

இன்று குடும்பத்தில் மகிழ்ச்சியும் நல்ல புரிந்துணர்வும் காணப்படும். அனுசரணையான மன நிலை மூலம் குடும்பத்தில் நல்லிணக்கம் பராமரிக்கலாம்.

இன்று நிதிநிலையில் சில கட்டுப்பாடுகள் காணப்படும். இதனால் வரவு செலவு இரண்டும் காணப்படும்.

இன்று அஜீரணக் கோளாறு பிரச்சினை காணப்படும். உணவில் கவனம் தேவை.




அனுசரணையான அணுகுமுறை மூலம் நீங்கள் இன்றைய நாளை மகிழ்ச்சி கரமாக ஆக்கலாம். இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும்.

உங்கள் மேலதிகாரியுடன் தகவல் தொடர்பில் இருக்கும் பிரச்சினை காரணமாக பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறிது அனுசரித்து செல்வதன் மூலம் இந்தச் சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம்.

குடும்பத்தில் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். நெருங்கிய உறவுகளிடம் சண்டை ஏற்படலாம். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.

இன்று மிதமான ஆரோக்கியமே காணப்படும். முதுகு வலி மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களையும் பிறரையும் மகிழ்விக்க சரியான அணுகுமுறையை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மூலம் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று பணிகள் அதிகம் இருக்கும் காரணத்தினால் அதிருப்தி நிலவும். உங்கள் மேலதிகாரிகளுடன் அனுசரிக்கும் போக்கில் பிரச்சினை காணப்படும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. நெருங்கிய உறவுகளிடம் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. பணத்தை பொறுத்தவரை இன்று முக்கிய முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண தைரியமாகவும் உறுதியுடனும் செயல்பட வேண்டும்.

கவனமாகப் பணியாற்றுவதன் மூலம் நன்மை பெறலாம். என்றாலும் தவறுகள் ஏற்படாமல் இருக்க எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உறவு முறை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் உடன் பிறந்தோர் மற்றும் நெருங்கிய உறவுகளிடம் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. இன்று எச்சரிக்கையாகவும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும்.

கால் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். வயிற்று உப்பசம் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். முயற்சிகள் எடுத்தாலும் அதிருப்தி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பது வரவேற்கத்தக்கதல்ல. அதனை தவிர்ப்பது நல்லது.

நீங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பொறுமையை பராமரிக்க வேண்டும். இதனால் வெற்றி அடையலாம். உங்கள் சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் குறைந்து காணப்படும். அகந்தைப் போக்கை தவிர்க்கவும்.

நிதிநிலைமை மகிழ்ச்சி கரமாக இருக்காது. குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அதற்காக இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




உங்கள் விருப்பங்களை நிறைவேற்ற நீங்கள் நேர்மையான முயற்சி எடுப்பீர்கள். இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். என்றாலும் தேவையற்ற கவலைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

பணிகள் இறுக்கமாக காணப்படும். இன்று பணிகள் அதிகமாக இருப்பதால் நேரத்தோடு பணியை முடிக்க வேண்டும்.

இன்று விரும்பத்தகாத தருணங்கள் ஏற்படலாம். இன்று உறவுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை.

இன்று மிதமான நிதி வளர்ச்சி காணப்படும். நிதி நிலைமையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

பதற்றம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அனுசரணையான அணுகுமுறை நல்லது. தியானம் மேற்கொள்வது சிறந்தது.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது. விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்கவும். இன்று சாதுர்யமாக செயல்பட வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் உறவில் சூடான விவாதங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்கள் துணையுடன் தொடர்பு கொள்ளும் போது அமைதியாக இருத்தல் நல்லது.

இன்று நிதி வளர்ச்சி எதிர்பார்க்கும் வகையில் இருக்காது. செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதற்றம் மற்றும் அதிக உழைப்பு காரணமாக உடல் வலி காணப்படும். ஓய்வெடுக்கவும் ஆன்மீக ஈடுபாட்டிற்கும் நேரம் ஒதுக்குங்கள்.




இன்று பல சௌகரியங்கள் காணப்படும்.இன்றுபயனுள்ளமுடிவுகளை எடுக்கலாம்.

இன்று நீங்கள் மகிழ்ச்சியோடு பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு தகுந்த அங்கீகாரம் கிடைக்கும்.

இன்று உங்களின் உறவுமுறை சிறப்பாக இருக்கும். உங்கள் துணையுடன் இன்றைய நாளை கொண்டாடி மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சிக்கான சாத்தியம் உள்ளது. என்றாலும் உங்கள் செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் -25.06.2025




இன்று நீங்கள் வெற்றி காணலாம். ஆனால் இன்று நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் உணர்ச்சி களை கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

பணி நிமித்தமான பயணம் காணப் படுகின்றது. உங்களின் நேர்மையான முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

உங்கள உடன் பிறந்தோர் மற்றும் நெருங்கிய உறவுகளுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் உறவில் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். அஜீ ரணக் கோளாறு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்க ளுக்கு கவலை அளிக்கும்.




இன்று ஏற்ற இறக்கங்கள் காணப் படும்.ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் மற்றும் வெற்றியைப் பெற்றுத் தரும்.

இன்று உங்கள் பணியில் கவ னம் செலுத்த வேண்டியது அவ சியம். பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

இன்று மகிழ்ச்சி குறைந்து காணப்படும். அன்பு குறைந்து காணப்படும். இன்று நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். பணத்தை சிறந்த வகையில் செலவு செய்ய வேண்டும்.

உங்கள் பெற்றோரின் உடல் நலனில் கவனம் தேவை. அதற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று நீங்கள் உங்களை பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்திக் கொள்வது நல்லது.

பணியில் இன்று வளர்ச்சி காணப்ப டாது. பணியில் கவனம் குறைவாக இருக்கும். பொறுமையுடனும் எச்ச ரிக்கையுடனும் பணியாற்ற வேண் டும்.

குடும்பத்தில் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. நெருங்கிய உறவுகளுடன் விவாதம் அல்லது கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். அது தேவை யற்ற செலவுகளாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.




இன்று திருப்தியும் முன்னேற்றமும் காண திட்டமிட்டு செயல்பட வேண்டும் நம்பிக்கையோடு அணுகுவது உங் களுக்கு நன்மை அளிக்கும்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப் படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பு அவ்வளவு சிறப்பாக இல்லை.

குழந்தைகளின் வளர்ச்சி கவலை அளிக்கும். உறவில் அகந்தைப் போக்கை கைவிட வேண் டும்.

இன்று பண வரவுக்கு உகந்த நாள் அல்ல. பணத்தை இழக்க வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்கவும்.

## பகிடிவதை விவகாரம்:

# தென்கிழக்கு பல்கலையின் 22 மாணவர்கள் இடைநீக்கம்




தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவர்களை பகி டிவதை செய்தனர் என கூறப்படும் 22 மாணவர்கள் பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகளில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரி யர் கலாநிதி எஸ்.எம்.ஜுனைதீன் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை செய்வதற்கு பல்கலைக்கழக பேராசி ரியர்களை கொண்ட விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 22 மாணவர்களே இவ்வாறு இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகள் முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தென்கிழக்கு பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ். எம். ஜுனைதீன் மேலும் தெரிவித்துள் ளார்.